CASE NO : ID 119/2022

NAME : MW1 - பூபாலன்

DATE : 02.04.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு முதல் விசாரணை தொடர்ச்சி,

எனது உறுதிகூற்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள Ex M14 ஆவணம் 31.03.2018 ம் தேதியிட்ட அறிவிப்பு, பிழைதிருத்த அறிவிப்பு மற்றும் பதிவு தபால் ரசீது ஆகியவற்றின் நகல் ஆகும். தவறுதலாக ஒப்புதல் அட்டை என்று குறிப்பிடப்பட்டுவிட்டது.

குறுக்குவிசாரணை

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1993ல் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் pin cutting பிரிவில் பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். Ex M6 ஆவணத்தில் அந்த தகவலை கூறியுள்ளோம் என்றால் சரிதான். அவர் ஆரம்பத்தில் அந்த பிரிவில் இருந்தார். அதன் பிறகு தேவைக்கேற்ப வேறு பிரிவுகளில் மாற்றப்பட்டார். Ex M6 ஆவணத்தில் மனுதாரரின் attandance விழுக்காடு

85% என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் Ex M6 ஆவணம் 1996 ம் வருடத்திற்குரியது. 19.09.2015 தேதியில் மனுதாரருக்கு அனுப்பிய Ex M17 எச்சரிக்கை கடிதத்தில் மனுதாரர் pin cutting துறையில் பணிபுரிந்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். 1993 முதல் 2015 இறுதி வரை மனுதாரர் pin cutting துறையில் தான் பணியாற்றினார் என்றால் சரியல்ல. தேவைகேற்றாற்போல் வேறு பிரிவுகளுக்கும் மாற்றம் செய்வது வழக்கத்தில் உள்ளதால், அதேபோல் அவரும் வேறு பிரிவுக்கு மாற்றம் செய்து பணியாற்றி உள்ளார். மனுதாரரை 2016 ல் தான் pin cutting ல் இருந்து tumbling பிரிவுக்கு மாற்றினோம் என்றால் சரிதான். அதற்கு முன்னரும் அவரை வேறு பிரிவுக்கு மாற்றியுள்ளோம். மனுதாரரை வேறு பிரிவுக்கு மாற்றவில்லை என்றும், அவர் தொடர்ச்சியாக pin cutting பிரிவில் தான் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. மனுதாரரை ஒரு பிரிவில் இருந்து வேறு பிரிவுக்கு மாற்றும் சமயத்தில் 9A notice வழங்கவில்லை என்றால் சரிதான். நிலையாணைகளுக்குட்பட்டும், பணிநியமன உத்தரவிற்குட்பட்டும் தான் வேறு பிரிவுக்கு மனுதாரரை மாற்றியுள்ளோம். ஆகையால் notice கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. மனுதாரர்

உயரம் குறைவாக இருப்பார் என்றால் சரிதான். மனுதாரர் உயரம் குறைவாக இருப்பதால் தான் நிர்வாகம் அவருடைய வசதிக்காக pin cutting துறையில் தொடர்ந்து வேலை வழங்கியது என்றால் சரியல்ல. உயரத்திற்கும் அவர் செய்யும் வேலைக்கும் சம்பந்தமில்லை. மனுதாரரை வேலை நீக்கம் செய்யும் சமயத்தில் அவர் shot penning பிரிவில் இருந்தார் என்றால் சரிதான். shot penning பிரிவில் பணியாற்றும் சமயத்தில் 4 அடி உயரத்திற்கு அந்த component யை வேலை செய்யும் நபர் தூக்க வேண்டும் என்றால் 2-3 அடி வரை தூக்க வேண்டும், அதை அவர் மட்டும் தூக்க வேண்டாம், அதற்குண்டான exquipments ம் கொடுத்துள்ளோம். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனுதாரர் கையால் தான் அந்த component யை தூக்க வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் உயரம் குறைவாக இருப்பதால் 06.06.2017 அன்று அந்த பணியில் ஈடுபடும் சமயத்தில் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த தேதியில் எந்த விபத்தும் ஏற்படவில்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் விபத்து ஏற்பட்டால் அந்த தொழிலாளிகளை சம்பத் மருத்துவமனையில் தான் சிகிச்சைக்கு சேர்ப்பது வழக்கம் என்றால் சரியல்ல. எந்த மருத்துவ மனைக்கு அனுப்புவோம்

என்றால் கங்கா மருத்துவமனைக்கு அனுப்புவோம். கங்கா மருத்துவமனைத்ககம் எங்கள் நிறுவனத்திற்கும் 25 **km** தூரம் இருப்பதால் அருகில உள்ள சம்பத் மருத்துவ மனைக்கு அனுப்புவது தான் வழக்கம் என்றால் சரியல்ல. 06.06.2017 தேதியில் விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு முதுகெலும்பில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, விபத்து எதுவும் ஏற்படவில்லை. 11.04.2017 தேதியிட்ட காரணம் கோரும் அறிவிப்பில் 08.06.2017 முதல் 17.06.2017 வரை மனுதாரைர் **ESI** மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். 22.06.2017 முதல் 25.06.2017 வரை மனுதாரர் **ESI** விடுப்பில் இருந்துள்ளார் என்பதையும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். 06.06.2017 தேதியில் எதிர்மனுதாரர்ர நிறுவனத்தில் மனுதாரர் பணியாற்றிய சமயத்தில் ஏற்பட்ட விபத்தால் தான் அவர் விடுப்பில் இருந்தார் என்றால் அவருக்கு விபத்து எதுவும் ஏற்படவில்லை. 10.07.2017 தேதியில் மனுதாரர் எதிர்மனுதாரர்க்கு மருத்துவ விடுப்பு கேட்டு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். அந்த கடிதத்திற்கு எதிர்மனுதாரர் தரப்பில் விளக்கமும் கொடுத்துள்ளோம். மனுதாரர் முறையான விடுப்பு விண்ணப்பம் கொடுத்து தான் விடுப்பு

எடுத்துள்ளார் என்றால் சரியல்ல, ஏனென்றால் 4 நாட்களுக்கு பிறகும் அவர் முறையாக ESI விடுப்பு விண்ணப்பம் சமர்பிக்கவில்லை. ESI மருத்துவ மனை கொடுத்த விடுப்பு சான்றிதழில் 17.06.2017 அன்றே மனுதாரர் வேலைக்கு ஆஜராக தகுதி உடையவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு பின்பும் அவர் வேலைக்கு வரவில்லை. ESI மருத்துவமனையில் அந்த மாதிரி எந்த தகுதி சான்றிதழ் வழங்க வில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தான் பணியாற்றினேன் என்று பணி சான்றிதழ் மற்றும் விபத்து அறிக்கை ESI மருத்துவ மனையில் இருந்த கேட்ட போது எங்கள் நிறுவனம் நடக்கவில்லை என்று கடிதம் கொடுத்ததால் ESI மருத்துவ மனையில் சிகிச்சை மறுக்கப்பட்டது என்றால் சரியல்ல, விபத்து நடக்கவில்லை என்பதால் அவ்வாறு சான்று வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும் விபத்து நடக்கவில்லை என்பதை மனுதாரருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளோம். விபத்து நடக்கவில்லை என்று எதிர்மனுதாரர் பொய்யாக காரணம் கூறியதால் மனுதாரர் ESI மருத்துவமனையில் சிகிச்சை எடுக்க முடியவில்லை என்றும் அதற்கான விடுப்பும் எடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல, ஏற்கனவே ESI

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று விடுப்பு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதால் அதற்கு பின்னிட்டு அவருக்கு மருத்துவ விடுப்பு சான்று ESI லிருந்து நிர்வாகத்திற்கு சமர்பிக்கவில்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுண்டான தொழிற்சங்கத்தில் மனுதாரர் உறுப்பினராக இருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 05.10.2001 தேதியில் மனுதாரருக்கு ஒரு தண்டனை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மனுதாரர் உட்பட 20 சக தொழிலாளர்கள் வேலைக்கு வராத காரணத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த தொழிற்சாலை எதிர்மனுதாரரின் வேறு Unit ஆகும். மனுதாரர் முதலில் இருந்தே தொழிற்சங்க நடவடிக்கையில் இருந்தார் என்றும் அதனால் தான் அவர் மீது நடவடிக்கை எடுத்து 8 நாள் சம்பளம் பிடித்துள்ளோம் என்றால் சரியல்ல, மனுதாரர் கடைசியாக வேலை பார்த்த unit ல் தொழிற்சங்கம் ஏதும் இல்லை. 24.01.2018ல் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சங்கம் ஆரம்பித்தற்காக 6 தொழிலாளர்களை உத்திரகாண்ட் மாநிலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்கள் என்றால் சரியல்ல. நிறுவனத்தின் தேவைக்காக பணியிட

மாற்றம் செய்ய்பபட்டார்கள். அதை ஆட்சேபித்து அங்கு பணியாற்றும் தொழிலாளர்கள் strike ல் ஈடுப்பட்டார்கள். அந்த சமயத்திற்கு முன்பிருந்தே மனுதாரர் absentல் இருந்து வந்தார். 24.01.2018 முதல் 20.08.2018 வரை வேலை நிறுத்த போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்தது என்றால் சரிதான். வேலை நிறுத்த போராட்டத்தில 24.01.2018 முதல் 20.08.2018 வரை மனுதாரரும் கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. 26.06.2017 முதலே மனுதாரர் absent ல் இருந்து வந்துள்ளார். மனுதாரர் strike ல் கலந்து கொண்ட காலத்தை absent ஆக எடுத்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல. shot penning பிரிவில் உடல் வலுவானர்களால் தான் பணியாற்ற முடியும் என்றால் சரியல்ல. சாதாரண உடல் வாகு உள்ளவர்களும் பணியாற்ற முடியும். உயரம் குறைவாக உள்ளதால் தான் மனுதாரர் 23 வருடங்கள் pin cutting பிரிவில் பணியாற்றினார் என்றும் அவர் வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்டார் என்பதற்காக அவரை பழிவாங்கும் நோக்கில் தான் shot peening பிரிவில் மாற்றினோம் என்றால் சரியல்ல. மனுதாரர் வேண்டுமென்றே absent ஆக வில்லை என்றும், விபத்து ஏற்பட்ட காரணத்தினால் தான் absent ஆகி உள்ளார் என்றால்

சரியல்ல. விபத்து எதுவும் நடைபெறவில்லை. மனுதாரர் தொடர்ந்து எந்த தகவலும் தராமல் absent ஆகி வந்தார். பிரமாண வாக்குமூலத்தில் 2016 ல் மனுதாரர் தொடர்ந்து 27 நாட்கள் absent ஆனார் என்று தெரிவித்துள்ளோம் என்றால் சரிதான். Ex M7 ல் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 ல் மனுதாரரை pin cutting ல் இருந்து shot peeninhg பிரிவுக்கு மாற்றியதால் தான் மனுதாரருக்கு முதுகெலும்பில் அதிக வலி ஏற்பட்டதால் தான் அவரால் பணிக்கு வர இயலவில்லை என்றால் சரியல்ல. அவர் வராத நாட்களுக்கு எவ்வித காரணமும் தெரிவிக்கவில்லை. விடுப்பு அனுமதியும் பெறவில்லை. Ex M7 ல் குறிப்பிட்ட தண்டனைணை உள்ளக விசாரணை நடத்தாமலேயே வழங்கியுள்ளோம் என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் குற்றசாட்டு உறுதியானதால் எச்சரிக்கை அறிவிப்பு வழங்கினோம். உள் விசாரணை நடத்தாமல் மேற்படி அறிவிப்பு வழங்கியது இயற்கை நீதி முறைகளுக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நிலையாணை விதிகளுக்கு உட்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 1993 முதல் 2016 வரைக்கும் மனுதாரர் absent ஆகாமல் தான் பணிபுரிந்து வந்தார் என்றும் அவரை pin cutting ல் இருந்து shot peening பிரிவுக்கு மாற்றியதால் தான் அவரால்

அங்கு வேலை செய்ய முடியாமல் absent ஆனார் என்றால் சரியல்ல. Ex M20 ஆவணத்தில் நிலையாணைகளின் சில பக்கங்களை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நிலையாணை விதிகள் முழுவதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது எதிர்மனுதாரர்க்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் தான் முழுமையாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் 26.06.2017 முதல் 11.04.2018 தேதி வரை பணிக்கு வராமல் absent ஆகி உள்ளதாக நிறுவனம் குற்றசாட்டு சுமத்தியது உண்மை அல்ல என்றால் சரியல்ல. மனுதாரரின் மொத்த பணிக்காலத்தை கணக்கில் எடுத்து கொள்ளாமல் அதிகபட்ச தண்டனையை நிர்வாகம் வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய தண்டணை தொழிலாளர் விரோத போக்கு ஆகும் என்றால் சரியல்ல. மனுதாரரை பணி நீக்கம் செய்ததால் அவர் வறுமையில் இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Industrial employment standing orders Actல் transfer என்ற provision இல்லை என்றால் சரியல்ல. 21.05.2019 தேதியிட்ட வேலை நீக்க உத்தரவு சட்டப்படி செல்லதக்கதல்ல எனவும் அவர் மனுவில்

கோரியுள்ள பரிகாரங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்றும் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. வேலை நீக்க உத்தரவு சட்டப்படி செல்லதக்கது. 20.08.2018 தேதியன்று வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்து 25.08.2018 அன்று மனுதாரர் பணிக்கு ஆஜரான போது நிர்வாகம் மனுதாரருக்கு பணி வழங்க மறுத்தது என்றால் சரியல்ல. மனுதாரர் வேலைக்கு ஆஜரானத்திற்கு பின்பு 31.08.2018ல் மனுதாரருக்கு பின் யோசனையுடன் விசாரணை அறிவிப்பு வழங்கினோம் என்றால் சரியல்ல. மனுதாரர் பலமுறை நிர்வாகத்திடம் கேட்டதில் 25.10.2018ல் தான் பணிக்கு அனுமதித்துவிட்டு 21.05.2019 ல் பணிநீக்கம் செய்து விட்டோம் என்றால் சரியல்ல. நிர்வாகம் வழங்கிய பணி நீக்க உத்தரவு பழிவாங்கும் நடவடிக்கை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.